**33 T I**

| | |
|---|---|
| තෙවන වාර විභාගය | 2024 |
| மூன்றாம் தவணைப்பரீட்சை | 2024 |
| Third Term Examination | 2024 |

| | |
|---|---|
| ගිණුම්කරණය | I, II |
| கணக்கீடு | I, II |
| Accounting | I, II |

ශ්‍රේණිය 12
தரம் 12
Grade 12

*පැය දෙකයි*
*இரண்டு மணித்தியாலம்*
*Two hours*

## கணக்கீடு - I

**கவனிக்க:**

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**
- இலக்கம் 1 தொடக்கம் 30 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1) , (2) , (3), (4) , (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவு செய்க.
- **இலக்கம் 31 தொடக்கம் 50 வரையுள்ள வினாக்களுக்குரிய சுருக்கமான விடையைப் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய **அறிவுறுத்தல்களையும்** கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.
- **செய்நிரலாத்தகா (Non - Programmable) கணிப்பான்கள் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்படும்.**

01) ஒரு நிறுவனம் கணக்கீட்டைப் பயன்படுத்துவதனால் கிடைக்கும் நன்மையாகக் கருதப்படாதது,
(1) தீர்மானம் எடுப்போருக்கு தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.
(2) நிறுவனத்தின் வளங்களைச் சரியாகப் பயன்படுத்தலாம்.
(3) கொடுக்கல் வாங்கல்களின் போது ஏற்படும் மோசடிகளை இனங்காண முடிதல்.
(4) கணக்காண்டின் இலாபத்தினை அதிகரிக்க முடியும்.
(5) நிறுவனம் தொடர்பாக தீர்மானமெடுக்க தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். (.........)

02) கணக்கீடு என்பது ஒரு குறிப்பிட்ட செயன்முறையாகும். கணக்கீட்டுச் செயன்முறையின் போது பின்பற்றப்படும் சரியான ஒழுங்குவரிசையாக அமைவது,

A - முதன்மை ஏடுகளில் பதிவு செய்தல்.
B - பரீட்சை மீதியை தயாரித்தல்.
C - நிதி அறிக்கைகளைத் தயாரித்தல்.
D - பேரேட்டுப் பதிவுகளை மேற்கொள்ளல்.

(1) ABCD (2) ABDC (3) ACBD (4) ADBC (5) ADCB
(.........)

03) மோட்டார் வாகனங்கள் விற்பனை செய்யும் வணிகமொன்றில் இடம்பெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

A - “டொயோடோ” நிறுவனத்திலிருந்து மீள் விற்பனை செய்யும் நோக்கில் கடனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட வாகனமொன்று குறித்த நிறத்தில் காணப்படாததினால் திருப்பியனுப்பப்பட்டது.
B - “டொயோடோ” நிறுவனத்திற்கான காசுக்கொடுப்பனவின் போது கழிவு கிடைக்கப்பெற்றது.
C - முகாமையாளரின் சொந்தப் பாவனைக்காக மோட்டார் வாகனமொன்று கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டது.

மேலே தரப்பட்டுள்ள கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்ய தேவையான மூல ஏடுகளின் சரியான ஒழுங்குவரிசையாக அமைவது,
(1) வெளித்திரும்பல் நாளேடு, பொது நாட்குறிப்பேடு, பொது நாட்குறிப்பேடு
(2) வெளித்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு, பொது நாட்குறிப்பேடு



www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

(3) வெளித்திரும்பல் நாளேடு, பொது நாட்குறிப்பேடு, கொள்வனவு நாளேடு
(4) வெளித்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு
(5) வெளித்திரும்பல் நாளேடு, காசு கொடுப்பனவு நாளேடு, பொது நாட்குறிப்பேடு (.........)

04) நிதி நிலமைக்கூற்றில் காணி, கட்டடம், நடைமுறையல்லாச் சொத்து எனவும் இறுதியிருப்பு நடைமுறைச் சொத்து எனவும் பாகுபடுத்தப்படுகின்றது. இதில் தாக்கம் செலுத்தும் எண்ணக்கரு,
(1) அட்டுறு எண்ணக்கரு (2) இணைதல் எண்ணக்கரு (3) பண அளவீட்டு எண்ணக்கரு
(4) தொடர்ந்தியங்குதல் எண்ணக்கரு (5) வெளிப்படுத்தல் எண்ணக்கரு
(.........)

05) வயம்ப லங்கா கூட்டு வணிகத்திடம் அச்சிடல் நிறுவனமொன்றும், வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகமொன்றும் காணப்படுகின்றது. இந்நிறுவனங்கள் இரண்டும் ஒரு நபருக்கு சொந்தமானது. எனினும் இந்நிறுவனங்கள் இரண்டினதும் இலாபங்கள் வெவ்வேறாக கணிப்பிடப்படுகின்றது. இதில் தாக்கம் செலுத்தும் எண்ணக்கரு,
(1) கால எண்ணக்கரு (2) அலகுசார் எண்ணக்கரு (3) வரலாற்றுக்கிரய எண்ணக்கரு
(4) பண அளவீட்டு எண்ணக்கரு (5) பாதுகாப்பு எண்ணக்கரு
(.........)

06) அக்கறையுடைய தரப்பினர் என்ற வகையில் நிறுவனத்தின் திட்டமிடல் செயற்பாடுகள் சரியாக நடைபெறுகின்றதா என்பதனை அறிய கணக்கீட்டு தகவல்களை எதிர்பார்ப்போர்,
(1) உரிமையாளர் (2) முகாமையாளர் (3) ஊழியர்கள்
(4) போட்டியாளர்கள். (5) நிதி நிறுவனங்கள்
(.........)

07) நிதிக்கணக்கீட்டின் சரியான செயன்முறைகளைக் காட்டும் தொகுதி,
(1) இனங்காணலும் அளவிடலும், பதிவு செய்தல், பொழிப்பாக்குதல், வகைப்படுத்தல்.
(2) இனங்காணலும் அளவிடலும், வகைப்படுத்தல், பதிவு செய்தல், பொழிப்பாக்குதல்.
(3) இனங்காணலும் அளவிடலும், பதிவு செய்தல், வகைப்படுத்தல், பொழிப்பாக்குதல்.
(4) பொழிப்பாக்குதல், வகைப்படுத்தல், பதிவு செய்தல், இனங்காணலும் அளவிடலும்.
(5) பொழிப்பாக்குதல், வகைப்படுத்தல், இனங்காணலும் அளவிடலும், பதிவு செய்தல். (.........)

08) ஆதவன் வணிகம் 2023.01.01 திகதி ரூபா 400 000 பெறுமதியான இயந்திரமொன்றைக் கடனுக்கு கொள்வனவு செய்ததோடு, 2023.12.31 ஆம் தினத்தன்று கடன் வட்டி ரூபா 10 000 உட்பட கடன் தவணைக்கட்டணமாக ரூபா 30 000 கொடுப்பனவு செய்யப்பட்டது. 2023.12.31 ஆம் தினத்திற்கு பின்வரும் கணக்கீட்டுச் சமன்பாடுகளில் எது இக்கொடுக்கல் வாங்கல்களின் தேறிய விளைவைக் காட்டுகின்றது?

| | சொத்து | = | உரிமையாண்மை | + | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| (1) | 370 000 | = | - 30 000 | + | 400 000 |
| (2) | 370 000 | = | - 10 000 | + | 380 000 |
| (3) | 380 000 | = | - 10 000 | + | 390 000 |
| (4) | 400 000 | = | - 20 000 | + | 400 000 |
| (5) | 400 000 | = | - 30 000 | + | 430 000 |

(.........)

09) நிறுவனமொன்றில் இடம்பெற்ற இரு கொடுக்கல் வாங்கல்களினால் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் பின்வருமாறு.

| | சொத்து (ரூபா) | = | உரிமையாண்மை (ரூபா) | + | பொறுப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| (A) | - 25 000 | = | -------- | + | - 25 000 |
| (B) | + 10 000 | = | + 10 000 | + | ------ |

மேலே காணப்படும் தாக்கத்திற்கான இரு கொடுக்கல் வாங்கல்களாக அமைவது,

| A | B |
|---|---|
| (1) ரூபா 25 000 பொருள் கடன் கொள்வனவு | ரூபா 10 000 கடன் மீள செலுத்தப்பட்டது. |
| (2) ரூபா 25 000 கடன் பணம் மீளச் செலுத்தப்பட்டது. | ரூபா 10 000 வாடகை வருமானம் பெறப்பட்டது. |
| (3) ரூபா 25 000 உரிமையாளரின் பற்று. | ரூபா 10 000 கடன்கொடுத்தோருக்கு செலுத்தப்பட்டது. |
| (4) ரூபா 25 000 கடன் பெறப்பட்டது. | ரூபா 10 000 சம்பளம் செலுத்தப்பட்டுள்ளது. |
| (5) ரூபா 25 000 கடன் பணம் மீளச் செலுத்தப்பட்டது. | ரூபா 25 000 கிரயமுடைய பொருள் ரூபா 15 000 இற்கு விற்பனை |

(.........)


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

10) குமார் என்பவர் 2023.04.01 இல் ரூபா 700 000 மூலதனத்தை ஈடுபடுத்தி வணிகமொன்றை ஆரம்பித்தார். 2024.03.31 இல் வணிகத்தின் சொத்துக்கள் ரூபா 1500 000 ஆக இருந்ததோடு பொறுப்புக்கள் ரூ. 300 000 ஆக அதிகரித்திருந்தது. இக்காலப்பகுதியில் ரூபா 20 000 மேலதிக மூலதனத்தை உரிமையாளர் ஈடுபடுத்தியதோடு, ரூபா 140 000 பற்றியிருந்தார். 2024.03.31 முடிவடைந்த வருடத்தில் உழைக்கப்பட்ட தேறிய இலாபம் எவ்வளவு?
(1) ரூபா 400 000 (2) ரூபா 620 000 (3) ரூபா 1 100 000
(4) ரூபா 1 200 000 (5) ரூபா 1 300 000 (.........)

♦ **பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி வினா இல 11, 12 என்பவற்றிற்கு விடையளிக்க.**

நிசான் வணிகத்தின் 2024.03.31 தினத்தன்று வங்கிக்கூற்றின் படி வங்கி மீதி ரூபா 320 000 ஆகும். எனினும் அத்தினத்திலான காசுக் கட்டுப்பாட்டு கணக்கின் மீதியுடன் இது இணங்கவில்லை.
**வேறுபாட்டிற்கான காரணங்கள் வருமாறு.**

- 2024.03.31 தீர்வையாகாத காசோலை ரூபா 110 000
  சமர்ப்பிக்கப்படாத காசோலை ரூபா 80 000
- வணிகத்திலிருந்து வழங்கப்பட்ட ரூபா 25 000 காசோலை காசு கொடுப்பனவு நாளேட்டில் ரூபா 15 000 என பதியப்பட்டது. எனினும் வங்கி சரியான பெறுமதியை வழங்கியிருந்தது.
- வங்கிக் கட்டணமாக ரூபா 1 000 அறவிடப்பட்டிருந்தது. நிலையான கட்டளைக் கொடுப்பனவாக செலுத்திய காப்புறுதி கட்டணம் ரூபா 2 000

11) 2024.03.31 திகதியில் நிதி நிலமைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய காசு மீதி எவ்வளவு?
(1) ரூபா 290 000 (2) ரூபா 292 000 (3) ரூபா 320 000 (4) ரூபா 304 000 (5) ரூபா 350 000
(.........)

12) 2024.03.31 திகதியில் காசுக்கட்டுப்பாட்டு கணக்கின் மீதி எவ்வளவு?
(1) ரூபா 304 000 (2) ரூபா 3 000 (3) ரூபா 343 000 (4) ரூபா 362 000 (5) ரூபா 363 000
(.........)

13) நிரஞ்ஜன் வணிகத்தில் 2024.04.01 இல் சில்லறைக்காசுக்கட்டு நிதி முறை ஆரம்பிக்கப்பட்டது. இவ்வணிகத்தின் சில்லறை செலவுகளுக்கான முற்பணம் ரூபா 15 000 ஆகும். இத்தொகை போதாத காரணத்தினால் 2024 மே மாதத்திலிருந்து முற்பணத்தினை ரூபா 5 000 இனால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது. 2024.05.01 இல் மீள நிரப்பப்பட்ட தொகை ரூபா 19 500 ஆகும். 2024.05.31 இல் சில்லறை காசேட்டின் மீதி ரூபா 1 500 எனின், ஏப்ரல் மாதத்திலிருந்து மே மாதம் வரையிலான சில்லறை செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு / குறைவு எவ்வளவு?
(1) ரூபா 4 000 அதிகரிப்பு (2) ரூபா 4 000 குறைவு (3) ரூபா 5 000 அதிகரிப்பு
(4) ரூபா 5 000 குறைவு (5) ரூபா 18 500 அதிகரிப்பு (.........)

14) பெறுமதி சேர்க்கப்பட்ட வரிக்கு (VAT) பதிவு செய்யப்பட்ட குமாரின் வணிகத்தில் 2024 மார்ச் மாதம் இடம்பெற்ற சில கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

- 10 % VAT உட்பட காசு விற்பனை ரூபா 550 000
- 10 % VAT உட்பட கடன் கொள்வனவு ரூபா 330 000
- வருமான வரித்திணைக்களத்திற்கு செலுத்தப்பட்ட VAT வரி ரூபா 10 000

2024.03.31 தினத்தன்று VAT கட்டுப்பாட்டு கணக்கின் மீதி,
(1) ரூபா 10 000 சொத்தாகும். (2) ரூபா 10 000 பொறுப்பாகும். (3) ரூபா 30 000 சொத்தாகும்.
(4) ரூபா 30 000 பொறுப்பாகும். (5) ரூபா 190 000 சொத்தாகும்.
(.........)

15) பாஸ்கர் வணிகத்தில் கணக்குப் பதிவின் போது ஏற்பட்ட சில வழுக்கள் வருமாறு.

A - பெற்ற கழிவுக் கணக்கின் மீதி ரூபா 2 000 இனால் குறைவாகக் கூட்டப்பட்டது.
B - பதிவழிக்கப்பட்ட வியாபார மதிப்புக் குறைவு நட்டம் ரூபா 3 000 அக்கணக்கில் செலவு வைக்கப்பட்டது.
C - தரகு வருமானம் ரூபா 5 000 அக்கணக்கில் பதிவு செய்யப்படவில்லை.

மேற்குறிப்பிட்ட வழுக்களில் தொங்கல் கணக்கில் செலவு மீதியை ஏற்படுத்தும் வழு,
(1) A மட்டும். (2) B மட்டும். (3) B, C மட்டும். (4) A, C மட்டும். (5) A, B, C மட்டும்.
(.........)

16) ரிஸ்வான் வணிகத்தின் கணக்குப் பதிவின் போது ஏற்பட்ட சில வழுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.
- கட்டட திருத்தற் செலவு ரூபா 50 000 கட்டடக் கணக்கில் வரவு வைக்கப்பட்டது.
- விற்பனைப் பட்டியல் ரூபா 10 000 கணக்குகளில் தவறவிடப்பட்டிருந்தது.
- கடன்பட்டோரிடம் பெற்ற காசு ரூபா 40 000 கணக்குகளில் இரு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது.


iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

மேற்குறிப்பிட்டுள்ள வழுக்களை திருத்தியதன் பின்னர் தேறிய இலாபத்தில் ஏற்படும் தாக்கம் என்ன?

(1) ரூபா 10 000 அதிகரித்தல். (2) ரூபா 40 000 அதிகரித்தல். (3) ரூபா 40 000 குறைதல்.
(4) ரூபா 50 000 அதிகரித்தல். (5) ரூபா 65 000 குறைவு (.........)

♦ **2023 ஏப்ரல் மாதம் நிமல் வணிகத்தின் கணக்குப் பதிவேடுகளிலிருந்து பின்வரும் கடன்கொடுத்தோர் தொடர்பான விபரங்கள் பிரித்தெடுக்கப்பட்டுள்ளன. இத்தகவல்களைக் கொண்டு 17, 18 ஆம் வினாக்களுக்கு விடையளிக்க.**

| | அருண் | வருண் | தருண் |
|---|---|---|---|
| 2023.04.01 இல் மீதி | 13 000 | 10 000 | ------ |
| கொள்வனவு (பட்டியல் விலை) | 8 000 | 4 000 | 5 000 |
| காசுக் கொடுப்பனவு | 10 000 | 6 000 | 4 000 |
| பெற்ற கழிவு | 400 | 200 | ------ |

■ **கொள்வனவின் போது பட்டியல் விலையில் 20 % வியாபாரக்கழிவு அனுமதிக்கப்பட்டது.**

17) ஏப்ரல் மாதம் கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி,

(1) ரூபா 14 400 செலவு (2) ரூபா 14 400 வரவு (3) ரூபா 15 600 செலவு
(4) ரூபா 15 600 வரவு (5) ரூபா 16 000 செலவு (.........)

18) கடன்கொடுத்தோரான வருணுக்கு கொடுத்த காசோலை மறுக்கப்பட்டுள்ளது. இதற்கான சரியான இரட்டைப்பதிவு,

(1) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு 6 200
காசுக் கணக்கு செலவு 6 000
பெற்ற கழிவு கணக்கு செலவு 200

(2) காசுக் கணக்கு வரவு 6 000
பெற்ற கழிவுக் கணக்கு வரவு 200
கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு 6 200

(3) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு 6 000
காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு 5 800
பெற்ற கழிவு கணக்கு செலவு 200

(4) காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு வரவு 5 800
பெற்ற கழிவு கணக்கு வரவு 200
கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு 6 000

(5) பெற்ற கழிவு கணக்கு வரவு 200
கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு செலவு 200 (.........)

19) அமீன் வணிகத்தின் 2024.03.31 இல் கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதி ரூபா 95 000 ஆகும். எனினும் அத்தினத்தின் கடன்பட்டோர் பட்டியல் மீதியுடன் இது இணங்கவில்லை. இது தொடர்பாக ஏடுகளைப் பரிசீலனை செய்த போது பின்வரும் வழுக்கள் இடம்பெற்றிருந்தமை அறியப்பட்டுள்ளது.

A - விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை உரிய தொகையினை விடவும் ரூபா 50 000 எனும் தொகையினால் கூடுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

B - கடன்பட்டோரான கஜனிடம் பெற்ற காசு ரூபா 4 000 அவரது கணக்கில் பதியப்படவில்லை.

C - வசந்தனுக்கு கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பெறுமதிசேர் வரி (VAT) 15 % உள்ளடங்கலாக ரூபா 34 500 க்கான விற்பனை வசந்தன் கணக்கில் சரியாக பதிவு செய்யப்பட்ட போதிலும் விற்பனை நாளேட்டில் VAT உள்ளடங்காத பெறுமதி பதிவு செய்யப்பட்டுள்ளது.

2024.03.31 தினத்தில் கடன்பட்டோர் பட்டியல் மீதி எவ்வளவு?

(1) ரூபா 44 500 (2) ரூபா 45 500 (3) ரூபா 53 500 (4) ரூபா 136 500 (5) ரூபா 144 500 (.........)

20) நேசன் வணிகத்தின் 2024.03.31 தினத்தன்று பேரேட்டுக் கணக்குகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. இவ்வேறுபாட்டுத் தொகை தொங்கல் கணக்கில் பதிவு செய்யப்பட்டது. இனங்காணாமைக்கான காரணங்களாக பின்வருவன இனங்கண்டு கொள்ளப்பட்டன.

- விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 50 000 இனால் குறைவாகக் கூட்டப்பட்டது.
- ஊழியர்களுக்கான சம்பளக்கொடுப்பனவுக்காக வழங்கப்பட்ட ரூபா 25 000 பெறுமதியான காசோலை காசுக் கணக்கில் சரியாக பதிவு செய்யப்பட்ட போதும் குறித்த செலவுக் கணக்கில் பதியப்படவில்லை.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

- அட்டுறுவான மின்சாரம் ரூபா 5 000 முதன்மை ஏடுகளில் இரு முறை பதிவு செய்யப்பட்டுள்ளது.

பரீட்சை மீதியில் ஏற்பட்ட வித்தியாசம் எவ்வளவு?

(1) வரவு 15 000 (2) செலவு 15 000 (3) வரவு 25 000 (4) செலவு 25 000 (5) செலவு 33 000

(.........)

21) பின்வரும் கொடுக்கல் வாங்கல்களில் சரியான இரட்டைப் பதிவைக் காட்டாதது எது?

| கொடுக்கல் வாங்கல்கள். | வரவு | செலவு |
|---|---|---|
| (1) காசுக்கொள்வனவு ரூபா 20 000 | கொள்வனவுக் கணக்கு | காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு |
| (2) கடன் கொள்வனவு ரூபா 30 000 | கொள்வனவுக் கணக்கு | கடன்கொடுத்தோர் கணக்கு |
| (3) காசு விற்பனை ரூபா 50 000 | காசுக்கட்டுப்பாட்டுக் கணக்கு | விற்பனைக் கணக்கு |
| (4) கடன் விற்பனை ரூபா 40 000 | கடன்கொடுத்தோர் கணக்கு | விற்பனைக் கணக்கு |
| (5) செலுத்த வேண்டிய தொலைபேசிக் கட்டணம் ரூபா 2 000 | தொலைபேசிக்கட்டணக் கணக்கு | அட்டுறு தொலைபேசிக் கட்டணக்கணக்கு |

(.........)

22) வணிகமொன்றின் நிதிக்கூற்றுக்களின் ஒன்றாகக் கருதப்படக்கூடியது,

(1) காசு பெறுவனவு நாளேடு (2) பரீட்சை மீதி (3) பொது தினசேரி
(4) வங்கி இணக்கக்கூற்று (5) வருமானக்கூற்று

(.........)

23) மாறன் வணிகத்தின் 2024.04.01 இல் அட்டுறு செலவு ரூபா 500 காணப்பட்டதோடு, 2024.03.31 இல் அட்டுறு மின்சார செலவு ரூபா 1 000 காணப்பட்டது. ஏப்ரல் மாதம் மாறனின் வீட்டின் மின்சாரக் கட்டணம் ரூபா 2 000 உட்பட செலுத்திய மின் கட்டணம் ரூபா 4 500 ஆகும். வணிகத்தின் விரிவான வருமானக்கூற்றில் பதிவு செய்ய வேண்டிய மின்சாரக் கட்டணம் எவ்வளவு?

(1) ரூபா 2 000 (2) ரூபா 2 500 (3) ரூபா 3 000 (4) ரூபா 3 500 (5) ரூபா 4 500

(.........)

24) வணிகமொன்றின் பரீட்சை மீதியில் பின்வரும் செலவுகள் காட்டப்பட்டுள்ளன.

**A** - விளம்பரம். **B** - குத்தகை வட்டி **C** - அலுவலக வாடகை **D** - கொள்வனவு
**E** - உள்வந்த வண்டிக்கூலி **F** - ஊழியர்களை அழைத்துச் செல்லும் வாகன பராமரிப்புச் செலவு.

மேற்குறித்த செலவுகளின் சரியான வகைப்படுத்தல் எது?

| | விற்பனைக் கிரயம் | விநியோகச் செலவு | நிர்வாகச் செலவு | நிதிச் செலவு |
|---|---|---|---|---|
| (1) | A , D | E | C | B , F |
| (2) | D , E | A | C , F | B |
| (3) | D , E | F | C | B |
| (4) | D , F | A | C | B |
| (5) | B , E | A , F | D | C |

(.........)

25) தனியுரிமை வணிகமான "அமலன் வணிகம்" ஊழியர் சேமலாப நிதியத்திற்கு (EPF) பங்களிப்பு செய்யும் நிறுவனமாகும். ஊழியர்களின் மொத்த சம்பளத்திலிருந்து அறவிடப்படுகின்ற ஊழியர் சேமலாப நிதியத்திற்கான (EPF) பங்களிப்பு 10 % மட்டுமேயாகும். நிறுவனம் இந்நிதியத்திற்கு 15 % பங்களிப்பை வழங்குகின்றது. 2024.03.31 தினத்தில் முடிவடைந்த நிதியாண்டில் ஊழியர்களுக்கு ரூபா 2 700 000 தேறிய சம்பளமாக வழங்கப்பட்டது. 2024.03.31 தினத்தில் முடிவடைந்த நிதியாண்டிற்கான இவ்வணிகத்தின் மொத்த சம்பளம் மற்றும் EPF செலவு எவ்வளவு?

| | மொத்த சம்பளம் "ரூபா 000" | EPF செலவு "ரூபா 000" |
|---|---|---|
| (1) | 2 700 | 405 |
| (2) | 2 700 | 450 |
| (3) | 300 | 450 |
| (4) | 300 | 750 |
| (5) | 3 600 | 540 |

(.........)

26) 2024.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான ஸ்டார் பேக்கரியின் கணக்குப் புத்தகங்களில் பிரித்தெடுக்கப்பட்ட விபரங்கள் பின்வருமாறு.



www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers - Model Answers - Study Resources

1) இருப்பு தொடர்பான விபரங்கள்.

| இருப்பு வகை | இறுதி மீதியில் ஏற்படுத்தியுள்ள தாக்கம் | பெறுமதி ‘000’ |
|---|---|---|
| I) மூலப்பொருள் | குறைதல். | 30 |
| II) நடைமுறை வேலை இருப்பு | அதிகரித்தல். | 15 |
| III) முடிவுப்பொருள் | குறைதல். | 20 |

2) மூலப்பொருள் கொள்வனவு — ரூபா 130 000
3) நேர்க்கூலிக் கிரயம். — ரூபா 70 000
4) உற்பத்தி மேந்தலைக் கிரயம். — ரூபா 35 000
5) ஏனைய நேர்க்கிரயம். — ரூபா 30 000

நடைமுறை வேலை இருப்பு மதிப்பீடு செய்யப்படுவது மொத்த உற்பத்திக் கிரயத்தின் அடிப்படையில் எனின், 2024.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான முதன்மைக் கிரயம் மற்றும் மொத்த உற்பத்திக் கிரயம் என்பன யாவை?

| | முதன்மைக் கிரயம் (ரூபா. 000) | மொத்த உற்பத்திக் கிரயம் (ரூபா. 000) |
|---|---|---|
| (1) | 200 | 220 |
| (2) | 200 | 250 |
| (3) | 215 | 250 |
| (4) | 260 | 280 |
| (5) | 260 | 310 |

(.........)

♦ **27 ஆம் மற்றும் 28 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்குப் பின்வரும் விபரங்களைப் பயன்படுத்துக.**

- 2023.01.01 தினத்தில் BRS விளையாட்டுக் கழகத்தில் 165 அங்கத்தவர்கள் உள்ளனர். ஓர் அங்கத்தவர் வருடத்திற்கு ரூபா 6 000 சந்தாவாகச் செலுத்த வேண்டும்.

2023.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான சந்தாப் பணம் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

- நடப்பு வருடத்தில் 25 புதிய அங்கத்தவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டதோடு, அவர்களினால் இரண்டு வருடங்களுக்கான வருட சந்தாப் பணம் ஒரே தடவையில் செலுத்தப்பட்டுள்ளது.
- 2023.01.01 இல் 15 அங்கத்தவர்களிடமிருந்து சந்தாப் பணம் கிடைக்க வேண்டியுள்ளது. அந்த அங்கத்தவர்களில் 10 பேர் முன்னைய வருடத்தில் செலுத்த வேண்டிய சந்தா மற்றும் நடப்பு வருடத்தில் செலுத்த வேண்டிய சந்தா பணங்களை 2023.12.31 தினத்திலும் செலுத்தாத காரணத்தினால் அவர்களின் அங்கத்துவம் இரத்து செய்யப்பட்டுள்ளது.
- 2023.01.01 இல் கிடைக்க வேண்டிய வருடாந்த சந்தா பணம் செலுத்த வேண்டிய 15 நபர்களில் மீதி 5 பேர் செலுத்த வேண்டிய சந்தா மற்றும் நடப்பு வருடத்திற்கான சந்தா பணங்களைச் செலுத்தியுள்ளனர்.
- 12 அங்கத்தவர்கள் நடப்பாண்டுக்கான சந்தாப்பணத்தைச் செலுத்தவில்லை.

27) 2023.12.31 இல் முடிவடைந்த நிதியாண்டிற்கான காசாக பெறப்பட்ட சந்தா பணம் யாது? (ரூபா. 000)
(1) 858 (2) 990 (3) 1008 (4) 1188 (5) 1830

(.........)

28) 2023.12.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான வருமானக்கூற்றில் காட்டப்பட வேண்டிய சந்தா வருமானம், அட்டுறு சந்தா பணம் மற்றும் பெற வேண்டிய சந்தா பணம் என்பவற்றை முறையாகக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

| | வருமானக்கூற்றில் (ரூபா.000) | அட்டுறு (ரூபா.000) | முற்பண சந்தா (ரூபா.000) |
|---|---|---|---|
| (1) | 858 | 90 | 150 |
| (2) | 1080 | 72 | 150 |
| (3) | 1080 | 60 | 300 |
| (4) | 1140 | 162 | 300 |
| (5) | 1140 | 72 | 150 |

(.........)

29) 1890 பங்குடைமைக் கட்டளைச் சட்டத்தின் 24 உப பிரிவின் படி பின்வரும் கூற்றுக்களுள் எக்கூற்று பிழையானது,

**A** - பங்காளர்கள் முகாமைத்துவத்திற்கு பங்களிப்பு செய்யும்போது இலாபத்தில் அவர்களுக்கு 5 % சம்பளமாகப் பெற உரித்துடையவர்கள்.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

**B** - பங்காளர்கள் பங்குடைமை வணிகத்திற்கு கொடுத்த கடனுக்கு 5 % வட்டி பெற உரிமையுண்டு.

**C** - பங்காளரொருவர் ஓய்வு பெறும் போது அவருக்குச் செலுத்தப்பட வேண்டிய தொகை செலுத்தப்படாமல் கடனாக நிறுவனத்தில் விட்டு வைக்கப்படின், அதற்கு 5 % வட்டியினைப் பெற உரிமையுண்டு.

**D** - பங்காளர் ஒருவரின் தனிப்பட்ட செலவை வணிகம் அவருக்குச் செலுத்தியிருப்பின், அது அவரின் நடைமுறைக் கணக்கில் சென்மதியாகக் காட்டப்படல் வேண்டும்.

(1) A , C , D மட்டும். (2) A , B , C மட்டும். (3) B , C , D மட்டும்.
(4) C , D மட்டும். (5) A , B , C , D அனைத்தும்.

(........)

30) சிவா மற்றும் கலை ஆகியோரினால் நடாத்தப்படும் பங்குடைமை வணிகத்தில் பங்குடைமை ஒப்பந்தம் பின்வருமாறு.

- சிவாவிற்கு மாதாந்தம் ரூபா 10 000 சம்பளம் பெற உரித்துண்டு.
- இலாப நட்டம் சிவா மற்றும் கலை ஆகியோருக்குடையில் **2 : 1** விகிதப்படி பகிர்தல் வேண்டும்.
- சிவாவிற்கு வருடாந்தம் ரூபா 100 000 வும் கலைக்கு ரூபா 80 000 வும் மூலதன வட்டியாகக் கொடுப்பனவு செய்தல் வேண்டும்.

வணிகத்தின் 2024.03.31 இல் முடிவடைந்த வருடத்திற்கான விற்பனை வருமானம் ரூபா 2 000 000 ஆகும். அத்துடன் விற்பனைக் கிரயம் ரூபா 1 200 000 ஆகும். இந்த வருடத்தில் எந்தவித மேலதிக வருமானமும் இல்லை. இவ்வருடத்தினுள் மேலதிக மூலதனமிடல், பற்று எதுவுமில்லை. நிதியாண்டில் மொத்த செயற்பாட்டுச் செலவு ரூபா 200 000 ஆகும்.

2024.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் பங்காளர்களின் உரிமையில் ஏற்பட்ட அதிகரிப்பு எவ்வாறு காணப்படும்?

| | **சிவா (ரூ)** | **கலை (ரூ)** |
|---|---|---|
| (1) | 180 000 | 140 000 |
| (2) | 330 000 | 270 000 |
| (3) | 420 000 | 180 000 |
| (4) | 420 000 | 240 000 |
| (5) | 180 000 | 420 000 |

(........)

31) வணிக நிறுவனமொன்று தொடர்பாக அக்கறை காட்டும் பிரிவினரும் அவ்வாறு அக்கறைக் காட்டுவதற்கான காரணங்களும் காணப்படுகின்றன.
கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் தேவைப்படும் அக்கறை காட்டும் கட்சியினரைக் குறிப்பிடுக.

| **அக்கறையுடைய கட்சியினருக்குத் தேவையான தகவல்கள்.** | **அக்கறையுடைய கட்சியினர்.** |
|---|---|
| A) முதலீட்டுக்கு ஏதுவான இலாபம் கிடைக்கப் பெற்றுள்ளதா? | ........................................................................ |
| B) திட்டமிடல் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? | ........................................................................ |
| C) தொழிலில் பாதுகாப்பு உள்ளதா? | ........................................................................ |
| D) சரியான முறையில் வரி செலுத்தப்படுகின்றதா? | ........................................................................ |

32) அசோக்கின் வணிகத்தின் கீழே குறிப்பிட்டுள்ள கொடுக்கல் வாங்கல் காரணமாக சொத்து, பொறுப்பு மற்றும் உரிமையாண்மைக்கு ஏற்படும் தாக்கங்கள் குறையுமா, அதிகரிக்குமா, மாற்றம் ஏற்படாதா எனக் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல்கள் | சொத்து | பொறுப்பு | உரிமையாண்மை |
|---|---|---|---|
| A) உரிமையாளர் ரூபா 150 000 இட்டு வணிகத்தை ஆரம்பித்தல். | ............................ | ............................ | ............................ |
| B) வணிக நடவடிக்கைகளுக்காக வாகனமொன்றைக் கொள்வனவு செய்தல். | ............................ | ............................ | ............................ |
| C) வணிக நடவடிக்கைகளுக்காகத் தளபாடங்களைக் கமலிடம் கடனுக்கு வாங்குதல். | ............................ | ............................ | ............................ |
| D) கடன்கொடுத்தோரினால் தாமத வட்டி அறவிடப்படல் | ............................ | ............................ | ............................ |



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

33) இரண்டு கொடுக்கல் வாங்கல்கள் காரணமாகக் கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்பட்ட தாக்கங்கள் பின்வருமாறு.

| | இருப்பு (ரூபா) | = | உரிமை (ரூபா) | + | வணிகம் கொடுக்க வேண்டியது. (ரூபா) |
|---|---|---|---|---|---|
| i) | + 25 000 | = | | | + 25 000 |
| ii) | | = | - 2 500 | | + 2 500 |

மேலே குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களை விபரிக்குக.

1) ..........................................................................................

2) ..........................................................................................

34) கீழ் குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் மூல ஆவணம் மற்றும் முதன்மை ஏடுகளைக் குறிப்பிடுக.

| கொடுக்கல் வாங்கல்கள் | மூல ஆவணம் | முதன்மை ஏடு |
|---|---|---|
| A) உரிமையாளர் தனிப்பட்ட தேவைக்கு பொருட்களைப் பற்றுதல். | .................................................. | .................................................. |
| B) ஊழியர் சம்பளக் கொடுப்பனவு. | .................................................. | .................................................. |
| C) கடனுக்கு விற்பனை செய்யப்பட்ட பொருட்களின் உட்திரும்பல். | .................................................. | .................................................. |

35) சரியான வெற்றிடத்தில் " ✓ " அடையாளமிட்டு நிறுவனத்துடன் தொடர்புடைய பின்வரும் கூற்றுக்களை சரி அல்லது பிழை எனக் குறிப்பிடுக.

| கூற்றுக்கள் | சரி | பிழை |
|---|---|---|
| A) பொருள் இருப்பு அழிவுறும்போது தேறிய இலாபம் குறையும். | .................... | .................... |
| B) விற்பனையின் போதான பெறுமதிசேர் வரி (VAT) வணிகத்திற்கு இலாபம் ஒன்றாகும். | .................... | .................... |
| C) முற்பண வருமானம் வணிகத்திற்கு பொறுப்பாகும். | .................... | .................... |
| D) வணிகத்திற்கு கிடைக்க வேண்டிய தொகையில் தாக்கம் செலுத்தும் நட்டமானது உரிமையில் குறைவை ஏற்படுத்தும். | .................... | .................... |

36) கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கும் மிகப் பொருத்தமான கணக்கீட்டு எண்ணக்கருக்களைக் குறிப்பிடுக.

| | கணக்கீட்டு எண்ணக்கரு |
|---|---|
| A) வருமானக்கூற்றில் இலாபம் கணிப்பிடப்படும் காலத்தைக் குறிப்பிடுதல். | .............................................................. |
| B) உரிமையாளரின் தனிப்பட்ட செலவை நிறுவனம் செலுத்துவதை பற்றாகக் குறிப்பிடுதல். | .............................................................. |
| C) வாகனத்தைக் கொள்வனவு செய்த கிரயத்தை மதிப்பிடுதல். | .............................................................. |
| D) இருப்பினைச் சந்தைப் பெறுமதி மற்றும் கிரயப் பெறுமதி ஆகிய இரண்டில் குறைந்த பெறுமதியில் மதிப்பிடல். | .............................................................. |

37) KGF நிறுவனத்தில் சிறு செலவினை மீள்நிரப்பல் செய்யும் தினத்தில் சிறு செலவுக் காசாளரிடம் ரூபா 5 000 காசு காணப்பட்டது. சில்லறைக் காசாளரால் பின்வரும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன.

- உரிமையாளரின் பிள்ளையின் வகுப்புக் கட்டணம் — ரூபா 3 000
- கடன்கொடுநர் சமனுக்குக் கொடுப்பனவு — ரூபா 4 000
- காகிதாதிகள் செலவுகள் — ரூபா 2 000

இந்நிறுவனத்தின் சிறு செலவு கட்டுநிதி மற்றும் மீள்நிரப்பல் செய்த தொகை யாது?

அ) சிறு செலவு கட்டுநிதி ..........................................................

ஆ) மீள்நிரப்பல் செய்த தொகை ..........................................................



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

♦ **38 மற்றும் 39 ஆம் வினாக்களுக்கு விடையளிப்பதற்காக பின்வரும் விபரங்களைக் கருத்திற்கொள்ளவும்.**

- அபிமனின் வணிகத்தில் 2024 மார்ச் 01 இல் காசேட்டு மீதியாக ரூபா 50 000 காணப்பட்டது.
- மாதத்திற்கான மொத்த காசுப் பெறுவனவு ரூபா 300 000 ஆகக் காணப்பட்டதோடு, அவற்றில் ரூபா 60 000 பெறுமதியான காசோலைகள் தீர்வையாகவில்லை.
- மாதத்திற்கான சகல கொடுப்பனவுகளும் காசோலை மூலமாக செய்யப்பட்டதோடு, அத்தொகை ரூபா 150 000 ஆகும். அவற்றில் வங்கிக்கு சமர்ப்பிக்கப்பட்டு வங்கியானது கொடுப்பனவு செய்த தொகை ரூபா 130 000 பெறுமதியான காசோலைகள் மட்டுமே ஆகும்.
- வங்கிக்கூற்றில் மார்ச் 31 இல் ரூபா 150 000 மீதியாகக் காணப்படுவதோடு, வங்கியால் வங்கிக் கட்டணமொன்றும் அறவிடப்பட்டுள்ளது. இது தவிர வேறு வழூக்கள் ஏற்படவில்லை.

38) மேலே கொடுக்கப்பட்ட விபரங்களுக்கு அமைவாக 2024.03.31 இல் செம்மையாக்கப்பட்ட காசேட்டு மீதி யாது?

..............................................................................................................................

39) மார்ச் மாதத்தில் வங்கியால் அறவிடப்பட்ட கட்டணத்தொகை யாது? ..........................................................

40) தோனி வணிகத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கலொன்றின் வரவுப் பதிவுகள் பின்வருமாறு காணப்பட்டது.

| | | |
|---|---|---|
| கொடுத்த கழிவுக் கணக்கு | வரவு | 500 |
| காசுக் கணக்கு | வரவு | 4 500 |

இதற்கான செலவுப் பதிவு யாது? ..........................................................................................

41) உற்பத்திக் கிரய அட்டவணையிலுள்ள கிரயச்செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

உற்பத்திக் கிரயம்

அ) ..........................................................  ஆ) உற்பத்தி பொது மேந்தலைக் கிரயம்.

நேர் பொருள் | நேர் கூலி | ஏனைய நேர்ச்செலவு

நேரில் பொருள் கிரயம் | நேரில் கூலிக்கிரயம் | ..............................

நிமாலி தளபாட உற்பத்தி வணிகத்தின் கிரயச்செலவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| A | - | பலகைக்கான கிரயம் | ரூபா 40 000 |
| B | - | இயந்திரத்தேய்வு | ரூபா 5 000 |
| C | - | மணல் கடதாசி மற்றும் பொலிஷ் செய்யும் செலவு | ரூபா 2 000 |
| D | - | தச்சன் சம்பளம் | ரூபா 30 000 |
| E | - | மின்சாரச் செலவு | ரூபா 2 000 |

இந்த வணிகம் தொடர்பான மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் அ மற்றும் ஆ ஆகிய இடங்களுக்கான கிரயப் பெறுமதிகள் யாவை?

அ - ..........................................................  ஆ - ..........................................................

42) 2023.04.01 தினத்தில் தொடங்கப்பட்ட சின்ன குளம் கிராமத்தின் மரணாதார சங்கத்தில் 30 பேர் அங்கத்தவர்களாக இருப்பதோடு, அதில் 10 பேர் ஆயுள் அங்கத்தவர்களாவர். ஆயுள் அங்கத்தவராவதற்கு வருடாந்த அங்கத்துவப் பணமான ரூபா 500 படி, 10 மடங்கு ஒரே தடவையில் சங்கத்திற்கு கொடுக்கப்பட்டுள்ளது. அங்கத்துவம் பெற்ற வருடத்திலிருந்து 10 வருடங்களில் ஆயுள் அங்கத்துவப் பணம் வருமானமாகக் கருதப்படும்.

ஏனைய அங்கத்தவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு வருடத்தினுள் அங்கத்துவப் பணம் செலுத்தியுள்ளனர்.

5 பேர் 6 மாதங்களுக்கு
8 பேர் ஒரு வருடத்திற்கு
7 பேர் இரண்டு வருடங்களுக்கு

2024.03.31 இல் முடிவடைந்த வருடத்தின் அங்கத்துவப்பண வருமானம் மற்றும் காசாகப் பெற்ற அங்கத்துவப்பணம் எவ்வளவு?

அ) அங்கத்துவப்பண வருமானம் ..........................................................

ஆ) காசாகப் பெற்ற அங்கத்துவப்பணம் ..........................................................



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers - Model Answers - Study Resources

43) இலாப நோக்கற்ற நிறுவனங்களின் கீழ்க் காணப்படும் கணக்குகளுக்குப் பொருத்தமான கணக்குப் பதிவு மூல ஆவணத்தைக் குறிப்பிடுக.

A - அங்கத்துவப்பணம் பெறல். ..............................................................................................

B - நன்கொடையாக கிடைக்கப் பெற்ற வாகனம். ..............................................................................................

C - பெறுவனவு, கொடுப்பனவுக் கணக்கு ..............................................................................................

D - பெறவேண்டிய அங்கத்துவப்பணம். ..............................................................................................

44) கீழ்க் காணப்படும் வழுக்கள் அமீன் பொதுக் கம்பனியின் 2024.03.31 இல் முடிவடைந்த வருடத்தில் இடம்பெற்றவை.

A - விற்பனை நாளேட்டின் கூட்டுத்தொகை ரூபா 3 000 000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கிலும் விற்பனைக் கணக்கிலும் ரூபா 300 000 ஆகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

B - கடன்பட்டோருக்கு கொடுத்த கழிவு ரூபா 250 000 கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள வழுக்களை திருத்துவதற்கான இரட்டைப் பதிவுகளை எழுதுக. (விளம்பல் தேவையில்லை)

| | | |
|---|---|---|
| A) ..............................................................................................<br>.............................................................................................. | ..........................<br>.......................... | ..........................<br>.......................... |
| B) ..............................................................................................<br>.............................................................................................. | ..........................<br>.......................... | ..........................<br>.......................... |

♦ **45 இலிருந்து 47 வரையான வினாக்களுக்கு விடையளிப்பதற்காக கீழ்க் காணப்படும் தகவல்களைப் பாவிக்கவும்.**

2023.04.01 ஆம் திகதி உமாலா மற்றும் நிம்மா இருவரும் 3 : 2 விகிதத்தில் இலாப நட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு பங்குடைமை வணிகத்தில் அன்பு என்பவர் ரூபா 600 000 முதலீடு செய்து புதிய பங்காளராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். அந்நேரம் வணிகத்தின் நன்மதிப்பு ரூபா 600 000 ஆக கணிப்பிடப்பட்டது. நன்மதிப்பானது மூலதனக்கணக்கினூடாக சீராக்கப்படும்.

புதிய பங்குடைமை ஒப்பந்தத்தில் பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அ) உமாலா, நிம்மா மற்றும் அன்பு ஆகிய மூவருக்கிடையில் 3 : 2 : 1 விகிதாசாரத்தில் இலாப நட்டங்கள் பகிரப்படும்.

ஆ) ஒவ்வொரு பங்காளருக்கும் ரூபா 60 000 வருடாந்த வேதனமாக பெற உரிமையுண்டு.

2024.03.31 தினத்தில் சகல கொடுக்கல் வாங்கல்களும் சரியாக பதியப்பட்டதன் பின்னர், மூலதன மற்றும் நடைமுறைக் கணக்குகளின் மீதிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| | உமாலா (ரூபா) | நிம்மா (ரூபா) | அன்பு (ரூபா) |
|---|---|---|---|
| மூலதனக் கணக்கு | 442 000 | 880 000 | 500 000 |
| நடைமுறைக் கணக்கு | 570 000 | 400 000 | 140 000 |

- அன்பு நடைமுறை வருடத்தில் ரூபா 40 000 காசு பற்றாக எடுத்துள்ளார்.

45) 2023.04.01 இல் பங்குடைமை வணிகத்தின் நன்மதிப்பைப் பதிவு செய்யத் தேவையான பொது நாட்குறிப்புப் பதிவுகளைத் தரவும்.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers · Model Answers · Study Resources

46) 2024.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் பங்குடைமை வணிகத்தின் இலாபம் யாது?
ரூபா :.............................................................................................................................

47) 2023.03.31 தினத்தில் பங்குடைமை வணிகத்தில் காணப்பட்ட மொத்த உரிமையாண்மை எவ்வளவு?
.............................................................................................................................

48) கீழ்க் காணப்படும் கூற்றுக்கள் உண்மையா, பொய்யானதா எனக் கூறுக.

A) நிதிக்கூற்றுக்களில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர்களை இனங்காண்பதற்காக அட்டுறு எண்ணக்கரு உபயோகிக்கப்படும். ..........................................................

B) சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை நடைமுறை மற்றும் நடைமுறையல்லா என வகைப்படுத்த உபயோகிக்கப்படுவது கால எண்ணக்கருவாகும். ..........................................................

C) ஊழியர்களின் தேர்ச்சிகளை வணிகங்களின் நிதிக்கூற்றுக்களில் காட்டாமலிருப்பதற்கு அடிப்படையாக அமைவது அலகுசார் எண்ணக்கருவாகும். ..........................................................

D) பாதுகாப்பு எண்ணக்கருவின் படி, எதிர்கால நட்டம் நிகழ்காலத்தில் அடையாளப்படுத்தப்படும்.
..........................................................

♦ **49 மற்றும் 50 வினாக்களுக்கு விடையளிப்பதற்கு கீழ்க் காணப்படும் தகவல்களை உபயோகிக்கவும்.**

1) நுவனின் வணிகத்தின் பொழிப்பாக்கப்பட்ட நிதி நிலமைக்கூற்று கீழே தரப்பட்டுள்ளது.

| <u>சொத்துக்கள்</u> | (ரூபா.000) |
|---|---|
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி | 6 000 |
| இருப்பு | 1 000 |
| வியாபாரத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை | 1 500 |
| வங்கியில் உள்ள காசு | 500 |
| | 9 000 |

| <u>உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்</u> | (ரூபா.000) |
|---|---|
| மூலதனம் | 8 760 |
| வணிகம் செலுத்த வேண்டிய தொகை | 240 |
| | 9 000 |

2) 2024.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டுக்கான வணிகத்தின் கொடுக்கல் வாங்கல்களின் பொழிப்புக்கள் வருமாறு.

| | (ரூபா.000) |
|---|---|
| விற்பனை (இதில் 60 % கடன் அடிப்படையிலாகும்) | 6 000 |
| கடன்பட்டோரிடம் பெற்ற காசு | 2 500 |
| கொள்வனவு (இதில் 80 % கடன் அடிப்படையிலாகும்) | 3 000 |
| கடன்கொடுத்தோருக்குக் கொடுத்த காசு | 1 240 |
| காசாகக் கொடுக்கப்பட்ட செயற்பாட்டுச் செலவுகள். | 520 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தேய்மானம். | 1 000 |
| பற்று (காசு) | 120 |

3) 2024.03.31 இல் இருப்பு 750 000 ஆகும்.



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers • Study Resources

49) 2024.03.31 இல் வணிகத்தில் காணப்பட்ட வியாபாரத்திற்கு கிடைக்க வேண்டிய தொகை மற்றும் வியாபாரம் செலுத்த வேண்டிய தொகைகளின் மீதிகளைக் குறிப்பிடுக.

அ) வணிகத்திற்கு கிடைக்க வேண்டியது ரூபா ......................................................................

ஆ) வணிகம் செலுத்த வேண்டியது ரூபா ......................................................................

இ) காசு ரூபா ......................................................................

50) 2024.03.31 இல் முடிவடைந்த நிதியாண்டில் நுவன் வணிகத்தின் தேறிய இலாபம் யாது?

ரூபா ......................................................................



iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers · Study Resources

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

ගිණුම්කරKය II
கணக்கீடு II
Accounting II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

තෙවන වාර විභාගය 2024(2025)
மூன்றாம் தவணைப் பரீட்சை 2024(2025)
Third Term Examination 2024(2025)

අමතර කියවීම් කාලය මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்
Additional Reading time 10 minutes

ශ්‍රේණිය 12
தரம் 12
Grade 12

- முதலாம், இரண்டாம் வினாக்கள் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் புதிய தாளில் விடை எழுத ஆரம்பித்தல் வேண்டும்.
- உரிய செய்முறைகள் விடைத்தாளுடன் இணைக்கப்படல் வேண்டும்.

01. ஆசிரி மற்றும் பிம்சர ஆகியோரினால் நடத்தப்படும் பங்குடமையில் 31.03.2024 இல் காணப்பட்ட பரிட்சை மீதி பின்வருமாறு

| கணக்குகள் | வரவு | செலவு |
|---|---|---|
| மூலதன கணக்கு ஆசிரி | | 3000 |
| பிம்சர | | 2500 |
| நடைமுறை கணக்கு ஆசிரி | | 500 |
| பிம்சர | | 400 |
| விற்பனைகள் | | 5700 |
| கடன் கணக்கு - ஆசிரி (01.04.2023) | | 1000 |
| வியாபார சென்மதி | | 800 |
| வெளித்திரும்பல் | | 200 |
| கட்டட வாடகை பெற்றது | | 150 |
| கழிவு பெற்றது | | 100 |
| சாருகவினால் மூலதனமாக இடப்பட்ட சொத்து | | 2000 |
| முடிவுப்பொருட்கள் கொள்வனவு | 2400 | |
| முடிவுப்பொருட்கள் இருப்பு (01.04.2023) | 200 | |
| வியாபார வருமதி | 1080 | |
| உட்திரும்பல் | 200 | |
| உற்பத்திக் கிரயம் | 1200 | |
| விநியோக செலவு | 390 | |
| நிர்வாக செலவு | 1100 | |
| மூலப்பொருள் இருப்பு (31.03.2024) | 100 | |
| நடைமுறை வேலை இருப்பு (31.03.2024) | 150 | |
| கடன் வட்டி செலுத்தியது | 50 | |
| காசு | 1400 | |
| பற்றுக்கள் - ஆசிரி | 300 | |
| - பிம்சர | 200 | |
| மூலதன வட்டி செலுத்தியது | | |
| - ஆசிரி | 150 | |
| - பிம்சர | 100 | |
| ஆதனம் பொறி உபகரணம் | 7330 | |
| | **16350** | **16350** |

மேலதிக தகவல்கள்
31.03.2024 ஆம் ஆண்டுக்கான நிதி கூற்றுக்களை தயாரிக்கும் முன்னர் பின்வரும் விடயங்கள் கருத்துக் கொள்ளப்பட வேண்டும்.

1. 31.03.2024 இல் காணப்பட்ட முடிவு பொருள் இருப்புகள் ரூபா 500000 என மதிப்பிடப்பட்டுள்ளுத.
2. மூலப்பொருள் அழிவடைந்தமை ரூபா 100000 உற்பத்தி கிரயத்தினை கனிப்பீடு செய்யும் போது கருத்தில் கொள்ளப்படவில்லை.
3. ஆசிரி மற்றும் பிம்சர ஆகியோருக்கு செலுத்தப்பட்ட சம்பளம் முறையே ரூபா 120000 மற்றும் ரூபா 80000 நிர்வாக செலவினத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
4. 31.03.2024 இல் செலுத்த வேண்டிய விளம்பர செலவுகள் ரூபா 150000 முற்பணமாக செலுத்திய காப்புறுதி செலவுகள் ரூபா 100000.
5. வியாபார வருமதிகளில் உள்ளடங்கியுள்ள ரூபா 80,000 பெறுமதியான கடன் பட்டோர் பதிவழிக்கப்பட வேண்டும்.
6. 31.03.2024 இல் சாருக என்பவர் புதிய பங்காளராக பங்குடமையில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். அவர் ரூபா 800000 காசினையும் ரூபா 1200000 பெறுமதியான மோட்டார் வாகனத்தையும் மூலதனமாக கொண்டு வந்தார். அவரால் கொண்டுவரப்பட்ட மூலதனத் தொகை பரீட்சை மீதியில் சாருக்கவின் சொத்து என பதிவு செய்யப்பட்டுள்ளது. புதிய பங்காளர் அனுமதிக்கப்பட்ட திகதியில் பங்குடமையின் நன்மதிப்பு ரூபா 1000000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டது. மேலும் நன்மதிப்பு பங்காளர்களின் மூலதன கணக்கின் ஊடாக சீராக்கம் செய்வதற்கு இணங்கப்பட்டது.
7. பழைய பங்குடமையின் ஒப்பந்தம்
   - ஆசிரி பிம்சர ஆகியோருக்கிடையில் இலாப நட்டங்களை 3:2 என பகிர்வு செய்தல்.
   - பங்காளர்களுக்கு மாதாந்த சம்பளமாக 20,000 வழங்குதல்
   - மூலதனக் கணக்குகளின் ஆரம்ப மீதிக்கு ஆண்டுக்கு 10 சதவீதம் வட்டி வழங்குதல்
   - பங்காளர்களினால் பங்குடமைக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கு 10 சதவீதம் ஆண்டுக்கு வட்டி வழங்குதல்
8. புதிய பங்குடமை ஒப்பந்தம்
   - ஆசிரி பிம்சர மற்றும் சாருக ஆகியோருக்கிடையில் 5:3:2 என்ற அடிப்படையில் இலாப நட்டங்களை பகிர்வு செய்தல்.
   - மேலும் பழைய பங்குடமையில் உள்ள ஏனைய ஒப்பந்த நியதிகளை அவ்வாறே பின்பற்றுதல்.
9. பங்குடமை அமைந்துள்ள கட்டடத்தின் ஒரு பகுதி மூன்றாம் தரப்பினர்களுக்கு ஆண்டுக்கு மூன்று லட்சத்துக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. ஆண்டின் காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாடகை பரீட்சை மீதியில் கட்டப்பட்டுள்ளது.

வேண்டப்படுவது
1. 31.03.2024 முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக் கூற்று (20 புள்ளிகள்)
2. பங்காளர்களின் நடைமுறை கணக்குகள் (9 புள்ளிகள்)
3. பங்காளர்களின் மூலதன கணக்குகள் (5 புள்ளிகள்)
4. 31.03.2024 இல் பின்வருவன தொடர்பாக நிதி நிலமை கூற்றில் காணப்பட்ட மீதிகள்
   இருப்புக்கள்
   வியாபார வருமதிகள்
   மொத்த உரிமையாண்மை (6 புள்ளிகள்)

**02.** தாமரை வணிகத்தில் ஜூன் மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் கீழே தரப்பட்டுள்ளது இந்நிறுவனம் VAT க்காக பதிவு செய்யப்பட்டுள்ள ஒரு நிறுவனம் ஆகும். VAT வரி வீதம் 15 வீதம் ஆகும்.

1. 01.06.2024 இல் காணப்பட்ட வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகள் வருமாறு (ரூபா 000)

| வியாபார வருமதியாளர் | | வியாபார சென்மதியாளர் | |
|---|---|---|---|
| ஹர்சிதா | 100 | மதீச | 80 |
| சதீபா | 20 | குசல் | 120 |
| விச்மி (செலவு) | 50 | சதீர | 20 |

2. வியாபார வருமதியாளர்களுடன் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் (தகவல்கள் மூல ஏடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டது ) ரூபா 000

| வியாபார வருமதியாளர் | விற்பனை (VAT நீங்கலாக) | உட்திரும்பல் (VAT நீங்கலாக) | அனுமதித்த கழிவு | பெற்ற காசு | அறவிட முடியாத கடன் |
|---|---|---|---|---|---|
| ஹர்சிதா | 2000 | 200 | 150 | 1350 | 100 |
| சதீபா | 2500 | 250 | 180 | 1620 | - |
| விச்மி | 3000 | 300 | 200 | 1800 | 200 |
| மொத்தம் | 7500 | 750 | 530 | 4770 | 300 |

3. வியாபார சென்மதியாளர்களுடன் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் (தகவல்கள் மூல ஏடுகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது) ரூபா 000

| வியாபார சென்மதியாளர் | கொள்வனவு (VAT நீங்கலாக) | வெளித்திரும்பல் (VAT நீங்கலாக) | பெற்ற கழிவு | செலுத்திய காசு | தாமதித்த வட்டி |
|---|---|---|---|---|---|
| மதீச | 1000 | 100 | 50 | 450 | 80 |
| குசல் | 1500 | 200 | 100 | 900 | - |
| சதீர | 1800 | 300 | 120 | 1080 | 100 |
| மொத்தம் | 4300 | 600 | 270 | 2430 | 180 |

4. 01.06.2024 இல் வியாபார வருமதியாளர்கள் பட்டியலும் வியாபார சென்மதியாளர் பட்டியல்களும் உரிய கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிகளுடன் இணங்கி காணப்பட்டது. எனினும் மீதிகள் ஜூன் மாத இறுதியில் உள்ள கட்டுப்பாட்டு கணக்குகளுடன் இணங்கவில்லை. இதற்கான காரணங்கள் வருமாறு,

   i. விச்மிக்கு மேற்கொள்ளப்பட்ட விற்பனையானது விற்பனை நாளேட்டில் பதிவு செய்யப்படவில்லை. எனினும் இது அவரது கணக்கில் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
   ii. அறவிட முடியாத கடன் பொதுப்பேரேட்டில் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. எனினும் துணை பேரேட்டில் சரியாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
   iii. ஜூன் மாத கொள்வனவு நாளேட்டின் மொத்தத் தொகை பொது பேரேட்டில் உள்ள கொள்வனவு கணக்கில் ரூபா 3400000 என மாற்றப்பட்டிருந்தது. VAT க்கான பதிவு சரியாக பதிவு செய்யப்பட்டிருந்தன.
   iv. வியாபார சென்மதியாளர்களினால் அறவிடப்பட்ட தாமத வட்டி வியாபார சென்மதியாளர்கள் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவில் பதியப்பட்டு இருந்தது. எனினும் இதற்கான மற்றைய பதிவு சரியாக பதிவு செய்யப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது

   i. மேற்கூறப்பட்ட வழுக்களை திருத்துவதற்கு முன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கும்
   ii. திருத்திய கடன் கடன்பட்டோர் கட்டுப்பாட்டு கணக்கும் கடன் கொடுத்தோர் கட்டுப்பாட்டு கணக்கும்
   iii. மேற்கு கூறப்பட்ட வழுக்களை திருத்துவதற்கான நாட்குறிப்பு பதிவுகள் (40 புள்ளிகள்)

**03.** 01.04.2024 வத்சக என்பவர் வணிகம் ஒன்றை ஆரம்பித்தார். ஏப்ரல் மாதத்தில் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டு சமன்பாட்டில் ஏற்படுத்திய தாக்கத்தினை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது. வணிக கருமங்கள் வாடகைக்குப் பெறப்பட்ட கட்டிடம் ஒன்றில் நடைபெறுகின்றது. வருடத்திற்கான கட்டட வாடகை ஒரே தடவையில் ஆரம்பத்தில் செலுத்தப்பட வேண்டும். அனைத்து காசு நடவடிக்கைகளும் வங்கி நடைமுறை கணக்கின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது

| | சொத்து | | | | | | பொறுப்பு | | | | உரிமை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| திகதி | மோட்டார் வாகனம் | தளபாடம் | இருப்பு | முற்செலு. செலவு | வியாபார வருமதிகள் | காசு | வங்கி கடன் | வியாபார சென்மதி | ஏனைய சென்மதி | பெற்ற முற்பணம் | |
| 01/04 | 6000 | 600 | | | | 1400 | | | | | 8000 |
| 02/04 | | | 800 | | | -200 | | 600 | | | |
| 03/04 | | | | 220 | | -240 | | | | | -20 |
| 05/04 | | | -300 | | | 500 | | | | | 200 |
| 08/04 | | | -30 | | | -20 | | | | | -50 |
| 12/04 | | | | | | -360 | | -400 | | | 40 |
| 15/04 | | | -200 | | 350 | | | | | | 150 |
| 16/04 | | | | | | 500 | 500 | | | | |
| 18/04 | | | 20 | | -35 | | | | | | -15 |
| 20/04 | | | | | -50 | | | -40 | | | -10 |
| 22/04 | | | | | -10 | | | | | | -10 |
| 24/04 | | | | | | -100 | | | 20 | | -120 |
| 25/04 | | | | | | 150 | | | | 150 | |
| 28/04 | | | | | -150 | 150 | | | | | |
| 30/04 | -60 | -6 | | | | | | | | | -66 |
| 30/04 | | | | | | -60 | -50 | | | | -10 |
| மீதி | 5940 | 594 | 290 | 220 | 105 | 1780 | 500 | 160 | 20 | 150 | 8099 |

மேலதிக தகவல்கள்

1. 01.04 மற்றும் 08.04 ஆகிய தினங்களில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களைத் தவிர உரிமையில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஏனைய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் இலாபத்தில் தாக்கம் செலுத்தும்.

2. 05.05.2024 இல் வங்கி கூற்று பெறப்பட்டது. வங்கி கூற்றில் உள்ள தகவல்கள்
   - வங்கிக்கட்டணம் ரூபா 5000
   - 25.04 இல் வைப்பு செய்யப்பட்ட காசோலை தேறி இருக்க வில்லை
   - 30.04.2024 செலுத்தப்பட்ட வங்கி கடன் தவணைப்பணம், வங்கிக் கூற்றில் இடம்பெறவில்லை

   வேண்டப்படுவது
   1) ஒவ்வொரு தினத்திலும் இடம்பெற்ற சரியான கொடுக்கல் வாங்கல்களை விவரிக்குக
   2) ஏப்ரல் மாதத்திற்கான இலாப நட்ட கூற்றை தயாரிக்குக
   3) 30.04.2024 இல் வங்கி கணக்கிணக்க கூற்று (40 புள்ளிகள்)

**04.** 31.12.2023 முடிவடைந்த ஆண்டில் ஐக்கிய விளையாட்டு கழகத்தின் புத்தகங்களில் இருந்து பெறப்பட்ட தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

1) 01.01.2023 இல் காணப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்கள் மற்றும் உரிமை (ரூபா 000)

| | |
|---|---|
| அலுவலக உபகரணம் | 480 |
| அட்டுரு சந்தா | 42 |
| காசு மீதி | 778 |
| ஆயுள் சந்தா பணம் | 400 |
| முற்பண சந்தா | 48 |
| திரண்ட நிதி | ? |

கழகமானது ஆயுள் அங்கத்துவ பணத்தினை உரிமையின் ஒரு கூறாக கருதுகின்றது

2) கழகத்தின் சந்தாக்கள் தொடர்பான விபரங்கள்
   - 01.01.2021 இல் பத்து உறுப்பினர்கள் ரூபா 5 லட்சம் செலுத்தி ஆயுள் அங்கத்துவ உரிமையை பெற்றுக்கொண்டனர். 10 ஆண்டுகளுக்கு ஆயுள் அங்கத்துவ பணத்தினை வருமானமாக இனங்காண்பது கழகத்தின் கொள்கையாகும்.
   - வருடாந்தம் ரூபா 6000 செலுத்தும் 500 (ஆயுள் அங்கத்தவர்கள் தவிர) உறுப்பினர்கள் சங்கத்தில் காணப்படுகின்றனர்.
   - 01.01.2023 இல் 70 அங்கத்தவர்கள் கடந்த வருடத்திற்கான சந்தாவை செலுத்தாமல் இருந்தனர். மேலும் 80 அங்கத்தவர்கள் இந்த வருடத்திற்கான சந்தாவை முற்பணமாக செலுத்தியிருந்தனர்
   - 01.07.2013 இல் 50 புதிய அங்கத்தவர்கள் கழகத்தில் இணைந்து கொண்டனர். அவர்கள் ஒரு வருடத்திற்கான சந்தா பணத்தினையும் அனுமதி கட்டணம் ரூபா 1000 படியும் செலுத்தி இருந்தனர். அனுமதி கட்டணத்தினை அவை பெற்ற வருடத்திலேயே வருமானமாக இனங்காண்பது கழகத்தின் கொள்கையாகும்
   - 31.12.2023 இல் 40 அங்கத்தவர்கள் (புதிதாக இணைந்து கொண்டவர்களை தவிர) 2024 ஆம் ஆண்டுக்கான சந்தா பணத்தினையும் செலுத்தியிருந்தனர். மேலும் 60 அங்கத்தவர்கள் 2023 ஆம் ஆண்டிற்கான சந்தா பணத்தினை செலுத்தி இருக்கவில்லை

3) கழகத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் 28.12.2023 இல் நடைபெற்றது அவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு
   - நினைவு புத்தக விற்பனையுடன் தொடர்புடைய வருமானங்களும் செலவுகளும்
     - ❖ 50 நிற புத்தகங்கள் ரூபா 2500 படி விற்பனை செய்யப்பட்டதுடன் 10 புத்தகங்களுக்கான காசு நிலுவையாக உள்ளது.
     - ❖ 40 கருப்பு வெள்ளை நிற புத்தகங்கள் ரூபா 1000 படி விற்பனை செய்யப்பட்டதுடன் 8 புத்தகங்களுக்கான காசு நிலுவையாக உள்ளது
     - ❖ நினைவு புத்தகங்களுக்கான மொத்த அச்சிடல் செலவு ரூபா ஐம்பதாயிரம் இவற்றுள் ரூபா 40,000 மட்டுமே காசு செலுத்தப்பட்டது.
   - பகல் உணவு
     - ❖ அங்கத்தவர் ஒருவருக்கான பகல் உணவிற்காக ரூபா 500 அங்கத்தவர்களிடமிருந்து (10 ஆயுள் அங்கத்தவர்கள் உட்பட) அறவிடப்பட்டது.
     - ❖ பகல் உணவிற்கான மொத்த செலவு ரூபா 210000 இதில் ரூபா 10000 அட்டுறுவாக உள்ளது

iexamhub
www.iexamhub.com
Your Trusted Partner for Exam Success
Past Papers Model Answers - Study Resources

4) 01.07.2021ல் ரூபா 300000 பெறுமதியான கணனி ஒன்று நிறுவனத்திற்கு நன்கொடையாக கிடைத்தது. நன்கொடைகளை மூன்று வருடங்களுக்கு வருமானமாக இனங்காண்பது கழகத்தின் கொள்கையாகும். மேலும் கணினியின் பயன் தரும் ஆயுட்காலம் 3 வருடங்களாகவும் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது

5) கிராமப்புற பாடசாலை ஒன்றுக்கு விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக கழகத்தினால் ரூபா 100000 காசு அன்பளிப்பு செய்யப்பட்டது. அன்பளிப்பு செய்த தினத்தில் விளையாட்டு பயிற்றுவிப்பு நிகழ்வு ஒன்றையும் சங்கம் நடத்தி இருந்தது. அந்நிகழ்வுக்காக ரூபா 50,000 அனுசரனையாக கழகத்திற்கு கிடைத்ததுடன் விளையாட்டுப் பயிற்றுவிப்பு செலவுகளாக ரூபா 45,000 ஏற்பட்டது

வேண்டப்படுவது

1. சந்தா கணக்கு, ஆயுள் அங்கத்துவ சந்தா கணக்கு (10 புள்ளிகள்)
2. காசு பெறுவனவு கொடுப்பனவு கணக்கு (11 புள்ளிகள்)
3. ஆண்டு பொதுக்கூட்டத்தினால் உருவான மிகை அல்லது குறை (5 புள்ளிகள்)
4. வருமான செலவு கூற்று (10 புள்ளிகள்)
5. 31.12.2024 இல் திரண்ட நிதி (4 புள்ளிகள்)

**05.** அருள்நிதி என்பவர் சில்லறை வியாபார வணிகம் ஒன்றை நடத்தி செல்கிறார். அவர் முறையாக கணக்கு புத்தகங்களை பேணவில்லை 31.03.2024 முடிவடைந்த ஆண்டுக்காக அவரது வணிகத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1. 31.03.2024 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியுடன் நடைபெற்ற கொடுக்கல் வாங்கல்களின் சுருக்கம் பின்வருமாறு

| விபரம் | வரவு | செலவு | மீதி |
|---|---|---|---|
| 01.04.2023 இல் மீதிகள் | - | - | -20000 |
| மொத்தம் வைப்பு செய்தது | | 470500 | 450000 |
| கடன் கொடுத்தோருக்கு செலுத்தியது | 354000 | | 96500 |
| சம்பளம் செலுத்தியது | 25000 | | 71500 |
| வாடகை செலுத்தியது | 12000 | | 59000 |
| மின்சார செலவு செலுத்தியது | 3500 | | 56000 |
| அச்சிடல் செலவு செலுத்தியது | 2550 | | 53450 |
| விளம்பர செலவு செலுத்தியது | 4550 | | 49800 |
| பற்றுக்கள் | 30000 | | 18900 |
| 31.03.2024 இல் மீதிகள் | | | 18900 |

2. சில சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் விவரங்கள் கீழே

| | 01.04.2023 | 31.03.2024 |
|---|---|---|
| வியாபார சென்மதிகள் | 24000 | 35000 |
| அட்டுறு வாடகை | 1500 | 1000 |
| அட்டுறு மின்சாரம் | 200 | 150 |
| முற்செலுத்தப்பட்ட விளம்பரம் | - | 2500 |
| இருப்பு | ? | 35000 |

3. 01.04.2023ல் உள்ளவாரான இருப்புகள் தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை.

4. வணிகத்தின் அனைத்து விற்பனைகளும் கொள்வனவுகளும் கடன் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. மொத்த இலாபவீதம் விற்பனையில் 25 சதவீதம் ஆகும்.

5. அருள்நிதி கடன் விற்பனைகளுக்கான விற்பனை பட்டியல்களை முறையாக பேணுகின்றார். அதில் விற்பனையில் இருந்து காசு பெற்ற தினங்களும் குறிப்பு செய்யப்படுகின்றன.
   - 01.04.2023 இல் வருமதியாக உள்ள பட்டியல்களின் பெறுமதி ரூபா 22500
   - ரூபா 42,500 பெறுமதியான பட்டியல்கள் இவருடத்தில் பதிவழிப்பு செய்யப்பட்டன
   - 31.03.2024 இல் வருமதியாக உள்ள பட்டியல்களின் பெறுமதி ரூபா 47750
   - வருமதியாளர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து காசும் வங்கியில் வைப்பு செய்யப்பட்டுள்ளது. அனைத்து கொடுப்பனவுகளும் வங்கி நடைமுறை கணக்கின் ஊடாகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வேண்டப்படுவது

1) 31.03.2024 முடிவடைந்த ஆண்டுக்கான வருமான கூற்று (26 புள்ளிகள்)
2) 01.04.2023 .ல் மூலதனம் (4 புள்ளிகள்)
3) 31.03.2024 உள்ள வாரான நிதி நிலைமை கூற்று (10 புள்ளிகள்)

**06.** குமுது தளபாட உற்பத்தியாளர்கள் 01.01.2024 இல் தமது வணிக நடவடிக்கைகளை ஆரம்பித்து இருந்தனர். அவர்கள் விசேட வகையான அனுமாரி ஒன்றை உற்பத்தி செய்து உள்நாட்டு சந்தைக்கு விற்பனை செய்கின்றனர். 31.03.2024 முடிவடைந்த முதல் மூன்று மாதங்களுக்கான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன

1) ரூபா 900000 பெறுமதியான பலகைகள் கொள்வனவு செய்யப்பட்டதோடு அவற்றில் ரூபா 800000 மட்டுமே காசாக செலுத்தப்பட்டது மேலும் ரூபா 100000 பெறுமதியான போக்குவரத்து செலவுகள் செலுத்தப்பட்டது ரூபா 50000 பெறுமதியான போக்குவரத்து செலவுகள் நிலுவையாக உள்ளது.

2) இக்காலத்தில் 50 அலுமாரிகள் உற்பத்தி செய்யப்பட்டது. ஒரு அலுமாரிக்கான தச்சர்கள் மற்றும் உதவியாளர்களுக்கான நேர்கூலியாக ரூபா 4000 செலுத்தப்பட்டது. நடைமுறை வேலை இருப்பில் நேர் ஊழிய கிரயங்கள் உள்ளடக்கப்படவில்லை. உற்பத்தி கிரயத்தில் 30 சதவீதம் இலாபத்னை சேர்த்து 45 அலுமாரிகள் இக்காலப் பகுதியில் விற்பனை செய்யப்பட்டிருந்தன .

3) காலப்பகுதியுடன் தொடர்புடைய செலவு விவரங்கள் வருமாறு (ரூபா)
   - இயந்திர தேய்வு 100,000
   - விநியோக வாகனத்தின் தேய்வு 80,000
   - பயன்படுத்திய நேரில் மூலப்பொருட்கள் 400,000
   - மேற்பார்வையாளர் சம்பளம் 250,000 (இதில் ரூபா 50000 நிலுவையாக உள்ளது )
   - எரிபொருள் 30,000
     (இவற்றில் 10,000 ரூபாய் பெறுமதியான பொருட்கள் எஞ்சி இருந்தன)
   - தொழிற்சாலை முகாமையாளர் சம்பளம் 150,000
   - நிர்வாக ஊழியர்களின் சம்பளம் 50,000
   - மின்சார செலவுகள் 180,000
   - விற்பனை பகுதி ஊழியர்களின் சம்பளம் 30,000
   - மூன்று மாதங்களுக்கான வட்டி 20,000 (இன்னும் செலுத்தப்படவில்லை)
   - விற்பனை பகுதி கட்டிடத்தின் வாடகை 240,000 (ஒரு வருடத்திற்கு செலுத்தப்பட்டது )

தொழிற்சாலையில் காணப்பட்ட நடைமுறை வேலை இருப்புகள் ரூபா 100000

வேண்டுப்படுவது

1. 31.03.2024 இல் முடிவடைந்த மூன்று மாதங்களுக்கான உற்பத்திக்கிரய கூற்று
2. அலுமாரி ஒன்றின் உற்பத்திக் கிரயம்
3. 31.03.2024 இல் உள்ளவரான முடிவு பொருட்கள் இருப்பின் கிரயம்
4. 31/3/2014 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கான வருமான கூற்று (40 புள்ளிகள்)